# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 7 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 10**
**OCTOBER 2023 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

இந்த ஜாமக்காரன் பத்திரிகை வாசகர்களாகிய நீங்களும் நானும் ஒன்றாய் இணைந்து பங்காளிகளாக இந்த பத்திரிகை ஊழியத்தில் செயல்பட்டதால் இத்தனை ஆண்டுகள் பத்திரிகை ஊழியம் மிக சிறப்பாக தடையில்லாமல் வருடத்தில் அனைத்து மாதத்திலும் வெளியிட முடிந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

ஜாமக்காரனை வாசித்தவர்கள் எழுதிய சாட்சிகள் ஏராளம். பலருடைய ஆவிக்குரிய கிறிஸ்தவ வாழ்க்கை தவறான உபதேசத்தில் தொடராமல் அதிலிருந்து விலகி வசன அடிப்படையிலான உபதேசத்தில் தெளிவாக பயணிக்க முடிந்தது.

தவறான ஊழியர்களை, ஊழியங்களை அடையாளம் காண ஜாமக்காரன் பெரும் உதவி செய்திருக்கிறது.

இந்த மாத ஜாமக்காரனில் **சேலம் சாரதா கல்லூரியில்** நடந்த உண்மை சம்பவத்தை அனேக ஆண்டுகளுக்கு பிறகு புதிய தலைமுறை மக்கள் அறியவேண்டி மறுபடியும் வெளியிட்டேன்.

**OCTOBER - 2023**

இதில் சேலம் **மேட்டூரிலிருந்து** மனம் திரும்பி இரட்சிக்கப்பட்ட **மேரி** என்ற பெண் PUC(+1) வகுப்பில் சேர்ந்து கல்லூரியிலேயே உள்ள விடுதியில் தங்கி படிக்கும்போது நிகழ்ந்த அற்புத ஆத்தும ஆதாய அனுபவத்தை மிகைப்படுத்தாமல் அப்படியே நடந்த சகம்பவத்தை எழுதினேன்.

**அந்த பெண்** தனித்தாள் ஊழியத்தின் மூலம் அவள் B.Sc., படித்து முடித்த கல்லூரியை விட்டு வெளியேரும்போது அவளின் சாட்சி மூலம் **தனி ஒருவளாய்** சம்பாதித்த ஆத்துமாக்கள் 73 மாணவிகள் ஆகும். அந்த 73 மாணவிகளும் இந்து மதத்தை சேர்ந்த மாணவிகள் ஒவ்வொருவரும் பல எதிர்ப்புகளுக்கிடையே, பல அவமானங்களுக்கிடையே தாங்கள் ஏற்றுக்கொண்ட உயிருள்ள தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை சுவிசேஷமாக மற்றவர்களுக்கு அறிவித்து அதன் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் ஏராளம். அதில் ஒரு குடும்பத்தை 2023 நவம்பர் மாதம் மதுரையில் நடந்த 3 நாள் கன்வென்ஷனில் என்னை சந்தித்தனர் அவர்கள் தம்பதி சமேதரராய் தாங்கள் பெற்றெடுத்த பிள்ளைகளோடு நேரில் கண்டபோது எத்தனையாய் சந்தோஷம் கொண்டு தேவனை துதித்தேன் தெரியுமா ? இத்தனைக்கும் அவர்கள் நான் பிரசங்கித்த CSI சபையை சேர்ந்தவரல்ல. வேறு ஆவிக்குரிய சபையை சேர்ந்தவர்கள். CSI கூட்டத்துக்கு நான் பேசும் கூட்ட விளபரத்தில் என் போட்டோவை கண்டு வெகு தூரத்திலிருந்து காரில் பயணப்பட்டு என்னை காண வந்தனர். வந்த அந்த தம்பதிகள் கேட்ட முதல் கேள்வி ஐயா! சேலம் சாரதா கல்லூரியில் எங்களை வழிநடத்திய அந்த மேரி என்ற அந்த பெண் என்ன ஆனாள்? அவள் எங்கிருக்கிறாள்? அவள் விலாசம் எங்களுக்கு தர முடியுமா? என்றாள்.

நான் கூறினேன். அந்த பெண்ணுக்கு திருமணமாகி அவள் ஒரு அரசாங்க வேலை கிடைத்து தன் கணவருடன் சந்தோஷமாக இருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன். நான் கேள்விப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டது. ஆகவே எனக்கு அவளைப்பற்றி வேறு ஒன்றும் தெரியாது என்றேன்.

அன்பான வாசகர்களே!

இந்த உண்மை சம்பவங்கள் மூலமாக ஆவியானவர் உங்களோடு கூற விரும்புதென்ன? நீங்கள் உண்மையாக மனம் திரும்பி இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருந்தீர்களே யானால் அந்த சந்தோஷத்தை உங்களால் அடக்கி வைக்க இயலாது. அந்த விவரிக்க முடியாத அந்த சந்தோஷத்தை யாருக்காவது அறிவிக்க தோன்றும். விளக்கை கொளுத்தி மூடிவைக்க முடியாது. இருளில் இருக்கும் ஜனங்களை நீங்கள் வசனம் என்ற விளக்கைக்கொண்டு போனால்தான் அவர்களை கண்டிபிடிக்க முடியும்.

## தனித்தாள் ஊழியம்

நான் முழுநேர ஊழியத்துகக்கு உடனே வரவேண்டுமா என்று அவசரப்படாதீர்கள். எந்த ஊழியத்தின் ஆரம்பமே **மனம் திரும்புதலிருந்து தான்** ஆரம்பிக்கிறது. மனம் திரும்புதல் உண்டாகிவிட்டால் நீங்கள் அதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும். பிரபல பிரசங்கியான D.L.மூடி என்பவர் முதலாவது தனித்தாள் ஊழியத்திலிருந்துதான் தன் ஊழியததை தொடங்கியிருக்கிறார்.

**நானும்** மனம் திரும்பிய உடன் முதலில் என் பள்ளி பருவத்தில் என்னோடு சேர்ந்து சின்ன சின்ன பாவத்தை செய்த என் பழைய கால நண்பர்களிடமிருந்து தான் தனித்தாள் ஊழியம் ஆரம்பித்தேன். அவர்கள் வளர்ந்து படிப்பில் உயர்ந்து பெரிய பெரிய வேலையில் அமர்ந்திருப்பதை கேட்டறிந்து அவர்கள் விலாசத்தை கண்டுபிடித்து அவர்களை சந்தித்து என் **மனம் திரும்புதலின்** அனுபவத்தையும் அதன் சந்தோஷத்தையும் பகிர்ந்துகொண்டேன். சிலர் ஆச்சரியப்பட்டு நான் கூறியதை கேட்டார்கள். சிலர் சிரித்து என் சாட்சியை அலட்சியப்படுத்தினர். ஆனால் நான் அவர்கள் அலட்சியப்படுத்தியதற்காக சோர்ந்துபோகவில்லை. அந்த நண்பர்களுக்காக தினசரி என் ஜெபத்தில் அவர்கள் பெயர் சொல்லி ஜெபித்தேன். சிலர் பிரபல ஊழியர்களாக மாறினார்கள். பலர் தங்கள் நிலையிலிருந்து தங்களை மாற்றிக்கொள்ளவில்லை.

☐ நான் ஒரு ஊருக்கு ஒரு பெரிய கன்வென்ஷனில் பேச அழைக்கப்பட்டேன். கூட்ட ஏற்பாடுகளை பிரபல பள்ளியின் தலைமை ஆசிரியரே ஏற்பாடுகளை பொருப்பேற்று **மைதானம், ஸ்டேஜ்** ஏற்பாடுகளை கவனித்தார். பிரசங்கிக்க வருபவர் உலகமெல்லா சென்று பிரசங்கிக்கும் பிரபல செய்தியாளர் என்று மட்டும் கேள்வி ப்பட்டுள்ளார். பெயர் நோட்டீஸ்ஸில் **வால் போஸ்டரில்** பெரிதாக அச்சிட்டு விளம்பரப்படுத்தியிருந்தார். யாரோ **டாக்டர் புஷ்பராஜ்** என்பவராம். அவர் செய்தியை கேட்க சுற்றியுள்ள ஊர்களிலிருந்து ஆட்கள் வருவதாக அறிந்து என்னை பார்க்க மிக ஆவலோடு தன் வீட்டில் காத்திருந்தார்.

நான் காரில் வந்து அவர் வீட்டின் முன் இறங்கினேன். நடந்து வீட்டுக்கு முன் வராந்தாவில் நின்றேன். என் கூட வந்தவர்கள் காலிங்பெல் அடித்தார்கள். தலைமை ஆசிரியர் வெளியே வந்தார். என்னைப்பார்த்தார். நான் தான் **டாக்டர் புஷ்பராஜ்** என்றேன். உடனே அவர் என்னை பார்த்து நீ **ஜார்ஜ்** தானே என்றார். ஆமாம் என்றேன். நீயா பிரசங்கிக்க போகிறாய் என்றார். ஆமாம் சார் என்றேன். பின் எப்படி உன் பெயரை **புஷ்பராஜ்** என்று மாற்றிக் கொண்டாய் என்றார். உடனே நான் என் முழு பெயர் **ஜார்ஜ் எட்மண்ட் புஷ்பராஜ்** என்றேன். பள்ளியில் படிக்கும் போது என்னை **ஜார்ஜ்** என்று தான் அழைப்பார்கள்

என்றேன். ஓ நீதான் அந்த **ஜார்ஜா** என்று அலட்சியமாக கூறி கொஞ்சம் இரு என்று கூறி உள்ளே சென்றார். என்னை உட்கார கூட சொல்லவில்லை. நின்று கொண்டிருந்தேன். அப்போது அவர் மனைவி வெளியே வந்து **ஜார்ஜ்** எப்படியிருக்கிறாய் உட்கார் என்று மிக மரியாதையாக வரவேற்று பேசினார். தலைமை ஆசிரியர் சில ஆசிரியர்களிடம் ஹோட்டல் அறையின் சாவியை கொடுத்து இவரை லாட்ஜிக்கு அழைத்து சென்று மாலை கூட்டத்துக்கு அழைத்த வாருங்கள் அந்த பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன் என்று கூறி ஓகே ஜார்ஜ், மாலை கூட்டத்தில் சந்திக்கலாம் என்று மிக அலட்சியமாக கூறி உள்ளே சென்று விட்டார். அவர் மனைவி என்னிடம் ஜார்ஜ் தப்பாக நினைத்துக் கொள்ள வேண்டாம். அவருக்கு காலையிலிருந்தே தலைவலி அதனால் உங்களிடம் சரியாக பேசவில்லை. அவர் உங்களை 1957ம் வருடம் பார்த்தது அதன்பின் உங்களை பல ஆண்டுகள் பார்க்கவில்லை. திடீர் என்று பிரபல ஊழியராக உங்கள் ஆட்கள் சூழ பார்த்த அதிர்ச்சி அதனால் அப்படி நடந்து கொண்டார்.

அன்று இரவு கூட்டத்தில் முதலில் என் அனுபவ சாட்சியை கூறினேன். அதில் இதே பள்ளியில் நான் படித்தவன் என்றும் நான் பள்ளியில் செய்த சேட்டைகள், குரும்புகள் யாவையும் கூறி நான் இந்திய ராணுவத்தில் மருத்துவ கல்லூரியில்(AFMC) படித்தது. டேனிஷ்பேட்டை பெத்தேல் பெல்லோஷிப்பில் டாக்டராக சேவை செய்தது அத்தனையும் கூறியதை கேட்டபின் தான் தலைமை ஆசிரியருக்கு என்மேல் தனி மரியாதை உண்டானது. கூட்டம் முடிந்த உடன் முதல் முறையாக அவர் என்னை **டாக்டர்** என்று அழைத்து என் கைகளை குலுக்கி எதையும் மறைக்காது நீங்கள் வெளிப்படையாக கூறிய உங்கள் சாட்சியை கேட்டு பெருமையடைகிறேன் என்றார்.

என் வாழ்க்கை மாற்றம் அதே பள்ளியில் என்னோடு படித்த பல மாணவர்கள், மாணவிகள் அதே பள்ளியில் அப்போது ஆசிரியர்களாகவும், ஆசிரியைகளாகவும் பணிப்புரிந்தார்கள் அத்தனைபேரும் என்னை சூழ்ந்து கொண்டு அன்றைய நாட்களில் அப்போது நான் பெண்களிடம் செய்த சில்மிஷம் யாவையும் கூறி பெரும் சிரிப்புக்கிடையில் நான் அகப்பட்டு பழைய கால நினைவுகள என்னை திக்கு முக்காட செய்தது.

ஆனால் அதே கூட்டத்தில் இரட்சிக்கப்பட்ட என் பழைய நண்பர்கள், நண்பிகள் கடைசி நாள் கூறிய சாட்சி எனக்கு மிகவும் சந்தோஷத்தை கொடுத்தது.

நான் கடைசியாக வாசகர்களுக்கு சொல்ல விரும்புவது யாரும் சரியான அழைப்பில்லாமல் மனம் திரும்பிய உடன் முழு நேர ஊழியத்துக்கு செல்ல தீர்மானிக்காதீர்கள், அப்படியே எல்லாரும் பாஸ்டராகவும் விரும்பாதீர்கள்.

**பேதுரு** கூறுவதை கேளுங்கள். 2 பேது 1:10. ஆகையால் சகோதரரே உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிறதையாக இருங்கள். இவைகளை செய்தால் நீங்கள் ஒரு காலும் இடரி விழுவதில்லை.

**பவுல்** தீமோத்தேயுவிக்கு சொன்ன ஆலோசனையை கவனியுங்கள். 2 தீமோ 4:5 **தீங்கனுபவி! சுவிசேஷகனுடைய** வேலையை செய்!. **உன் ஊழியத்தை** நிறைவேற்று!

## சுவிசேஷகனுடைய வேலையை செய்
## உன் ஊழியத்தை நிறைவேற்று

**உன் ஊழியத்தை** என்று குறிப்பிடுவது தனிதாள் ஊழியமாகும். எத்தனை பெரிய கூட்டங்களில் சுவிசேஷகனாக (Evangelist) பிரசங்கித்தாலும் தனியாக ஒரு மனுதனுக்கு **சுவிசேஷம் அறிவித்து** அவனை கிருஸ்துவின் தொழுவத்தில் சேர்க்க வேண்டும்.

பவுல் கூறுகிறார் சுவிசேஷம்அறிவிப்பது என்கடமை என்கிறார். அப்படியே சுவிசேஷம் அறிவிப்பது என் **கடன்** என்றும் கூறுகிறார்.

ஆகவே நாம் யாராக இருந்தாலும் எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிப்பது மிக முக்கியம்.

எனக்கு ஊழிய அழைப்பில்லை என்று கூறக்கூடாது 1 பேதுரு 2:5,9 . நாம் ஒவ்வொவரும் **பலி செலுத்தும்** ஆசாரிய கூட்டமாகவும் உங்களை அந்தகார சக்தியிலிருந்து ஒளியினிடத்தில் வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்து கொள்ளப்பட்ட ராஜரிக **ஆசாரிய கூட்டமாயிருக்கிறீர்கள்**............ என்கிறார்

பழைய ஏற்பாட்டில் **ஆசாரியன்** மட்டுமே செய்த வேலையை இயேசுவை ஏற்றுக்கொண்ட **நாம் எல்லாரும் செய்யவேண்டும்** என்கிறார். இயேசு சிலுவையில் அறையப்பட்டபின் தேவாலய திரைசீலை மேலிருந்து கீழாக கிழிக்கப்பட்டது. ஆகவே இனி இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நாமெல்லாரையும் ஆசாரியர்களாக ஆக்கிவிட்டார்.

**அன்று ஆசாரியின் செய்த இரண்டு வேலை**

1. ஜனங்களுக்காக **ஜெப பலி** ஏறெப்பது. ஜனங்களின் பிரச்சனைகளை கர்த்தரிடம் கூறுவது.

2. கர்த்தரின் வார்த்தையை (வசனத்தை) ஜனங்களுக்கு அறிவிப்பது.

இந்த இரண்டு வேலைகளை இரட்சிக்கப்பட்ட நாம் யாவரும் செய்தேயாக வேண்டும்.

**மற்றவர்களுக்காக** ஜெபிப்பது மற்றவர்களுக்கு இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிப்பது.

இந்த இரண்டு வேலைகளைத்தான் **அந்தப் பெண்** சம்பவத்தில் அதை **மேரி** என்ற ஏழ பெண் சாரதா கல்லூரியில் மொட்டை மாடியில் செய்தாள். முதலில் தன் இந்து சிநேகிதிகள் இயேசுவை அறிய வேண்டும் என்று சில நாட்களாக அழுது ஜெபித்தது.

அடுத்து அவளிடம் வந்த தன் அறை மாணவிகளுக்கு இயேசுவை சுவிசேஷமாக அறிவித்து தன் அறையில் இருந்த ஒரு மாணவி பல வருடங்களாக மாதா மாதம் அனுபவித்த மாதவிடாய் வேதனையையும், அதிக இரத்த போக்கையும் ஒரே இராத்திரி அவள் உபவாசித்த ஜெபித்தது பரிபூரண சுகத்தை பெற்று தந்தது.

வேதம் அறியாத, இயேசுவை அறியாதவர்கள் இயேசுவை அறிந்துக்கொள்ள இயேசு உண்டாக்கிய வழி. மாற் 16:20, ரோ 15:18.

அவர்களுக்கு **கிரியைநடப்பித்து** அவர்களால் நடந்த **அடையாளங்களால்** வசனத்தை உறுதிப்படுத்தினார்.

மேரி என்ற அந்த ஏழை +1 படித்துக்கொண்டிருக்கும்போது தன் அறையில் தங்கின உடன் **சிநேகிதியின்** மாதவிடாய் **வேதனையை அதிக உதிரப்போக்கையும்** அந்த அறை பிள்ளைகளிடம் இயேசு இதை **இன்றே சுகமாக்குவார்** என தன் சிறிய விசுவாசத்தால் சவால்விட்டு ஒரேஒரு நாள் அவள் செய்த உபவாச ஜெபத்திலும் அந்த பெண்ணுக்கு உதிரபோக்கு அன்றே நின்றது, வலி பூரணமாக சுகமானது. அந்த சுகம் 79 இந்து மாணவிகளை இயேசு உண்மையான கடவுள் என்பதை அந்த அற்புத சுகத்தால் நிரூபணமானதால் அத்தனை பேரும் வைராக்கியமுள்ள கிருஸ்தவ விசுவாசிகளாக மாறினார்கள்

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக

தொடர்ந்து வாசகர்கள் யாவருக்காகவும் தொடர்ந்து ஜெபிப்பேன்

டாக்டர் **புஷ்பராஜ்**

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# திரும்பி பார்க்கிறேன்

பல வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி, 17 வயதே நிரம்பிய ஒரு சிறு பெண் நடத்திய அற்புத ஆத்தும அறுவடையை ஞாபகப்படுத்துகிறேன். குறிப்பாக புதிய தலைமுறையினருக்காக இதை மறுபடியும் வெளியிடுகிறேன்.

சுமார் 25 வருடங்களுக்கு முன் என் பத்திரிகையில் ஜாமக்காரன் வாசகர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கும், ஆசிரிய ஆசிரியைகளுக்கும் ஒரு சவாலாக இருகட்டும் என இந்த உண்மை சம்பவத்தை எழுதினேன்.

பள்ளியில், கல்லூரியில் படிக்கும் வாலிப பிள்ளைகள் மதிய நேரம் உணவருந்திய பின் உள்ள அந்த இடைவெளியை வெருமனே கதை பேசி சிரித்து விளையாடி நேரத்தை போக்காமல் ஆத்துமாக்களை தேடுங்கள்

ஆத்துமாக்கள் உங்களை தேடி வராது **நாம்தான் ஆத்துமாக்களைத் தேடி** போக வேண்டும்.

இப்போதும் சில இடங்களில் ஆஸ்பத்திரி, அலுவலகம், தொழிற்சாலை மற்றும் கல்லூரிகளின் **மதிய நேரம்** அல்லது மாலை நேரத்தில் சிறு சிறு கூட்டங்களாக ஆங்காங்கு அமர்ந்து ஜெபிப்பதையும், ஆத்தம ஆதாயம் செய்வதையும் அறிவேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஆத்தும ஆதாய பணி பள்ளியிலும், அலுவகங்களிலும் தொழிற்சாலைகளிலும் தொடரட்டும். **நான் உங்களை மீன் பிடிக்கிறவர்களாக்குவேன்** என்று இயேசு கூறினார்.

# அந்தப் பெண் (1+4+7+61+73)

சேலத்தில் உள்ள பிரபல இந்துமத பெண்கள் கல்லூரி ஒன்றில் 17 வயதுள்ள அந்த பெண் பி.யு.சி. (+1) படிப்பிற்காக வந்து சேர்ந்தாள்



கல்லூரியில் சேருவதற்கு சில மாதங்களுக்கு முன்தான் அவள் இரட்சிக்கப்பட்டாள்.

புதிதாக இரட்சிக்கப்பட்ட அந்த ஆவிக்குரிய வேகம், சந்தோஷம் அனைத்தும் கல்லூரியில் சேர்ந்த பின் அந்த பெண்ணிடம் காணப்பட்டது. ஹாஸ்டல் அறையில் மொத்தம் 5 பேர் இவள் ஒருவள் மட்டுமே கிறிஸ்தவள் மற்றவர்கள் யாவரும் **இந்து** மதத்தை சேர்ந்தவர்கள்.



சேலத்தில் உள்ள ஒரு பெண்கள் கல்லூரி ஒன்றில் 17 வயதுள்ள அந்த பெண் பி.யு.சி. (+1) படிப்பிற்காக வந்து சேர்ந்தாள்

கல்லூரியில் சேருவதற்கு சில மாதங்களுக்கு முன்தான் அவள் இரட்சிக்கப்பட்டாள்.

புதிதாக இரட்சிக்கப்பட்ட அந்த வேகம், சந்தோஷம் அனைத்தும் கல்லூரியில் சேர்ந்த பின் காணப்பட்டது. ஹாஸ்டல் அறையில் மொத்தம் 5 பேர் இவள் ஒருவள் மட்டுமே கிறிஸ்தவள் மற்றவர்கள் யாவரும் இந்து மதத்தை சேர்ந்தவர்கள்.

அந்தப்பெண் அறையில் ஜெபித்தால் மற்ற நான்கு பெண்களும் சிரிப்பார்கள். அதனால் அவளால் **வேதமும்** வாசிக்க முடியவில்லை. இந்த திடீர் தடைகளும் சூழ்நிலை மாற்றங்களும் அவளை நிலை தடுமாற செய்தது.

ஜெபம் செய்ய முடியாதது **மூச்சுவிட முடியாமல்** திணறுவதுபோல அவளுக்கு

இருந்தது. ஆண்டவரிடம் தனியாகபோய் தன் நிலைமையெல்லாம் சொல்லி அழவேண்டும் போல இருந்தது. ஜெபிக்க சில நாளாக தன் கல்லூரியிலேயே இடம் தேடிக்கொண்டிருந்தாள். முடிவில் நல்ல இடம் கண்டு பிடித்தாள்.



கல்லூரியின் **மொட்டை மாடிதான்** அந்த இடம்

ஆரம்பத்தில் அந்த இடத்தில் ஜெபிக்க கஷ்டப்பட்டாள். பிறகு நாளாக நாளாக வேறு வழியில்லாமல் பழக்கப்படுத்திக்கொண்டாள்.

மதியம் உணவு வேளை, கல்லூரிவிட்டவுடன் மாணவிகள் **சாப்பிட ஓடுவார்கள்**, இவளோ அவர்களோடு சாப்பிட போட்டி போடாமல் அந்த பிள்ளைகள் யாவரும் கலைந்த பிறகு உண்டான அந்த இடை வேளையை ஜெபத்துக்கு பயன்படுத்திக்கொண்டாள்.

அந்த நான்கு மாடி கட்டிடத்தின் மேலே உள்ள **திறந்தவெளி மொட்டைமாடியில்** கைபிடி சுவரின் ஒரு ஓரமாக கொதிக்கும் வெய்யிலில் கீழே பேப்பரை விரித்து முழங்கால்படியிட்டு கண்ணீர்விட்டு ஜெபிப்பாள். இந்த வசதியில்லாத சூழ்நிலையின் மத்தியில் ஜெபிப்பதை அவளோ பேரின்பமாக அனுபவித்தாள்.

சில நாள் சென்றது. இவளோடுகூட அறையில் தங்கியிருந்த மற்ற 4 பெண்கள் இந்த பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்டனர். நாம் சாப்பிடும் வேளையில் இவள் நம்மோடு காணப்படுவதில்லை, எங்கோ செல்கிறாள். அந்த இடம் எங்கே என்று நாம் கண்டுபிடிக்கவேண்டும் என்று பேசிக்கொண்டார்கள்.

ஒருநாள் மதியம் கல்லூரி முடிந்த உடன் அந்த பெண்ணை ரகசியமாக பின் தொடர்ந்தார்கள். அவளோ ஒவ்வொரு மாடியாக கடந்து, கட்டிடத்தின் உச்சிக்கு செல்வதை கவனித்தார்கள்.

தினம் இப்படி தனியாக போகிறாளே! யாரோடேயாவது இரகசிய தொடர்பு கொள்கிறாளா? இன்று எப்படியும் கண்டுபடித்து விடுவது என்று இந்த நான்கு பெண்களும் இந்த பெண்ணை கடைசிவரை தொடர்ந்தார்கள்.

முடிவில் கட்டிடத்தின் உச்சியில் மொட்டை மாடியை அடைந்துவிட்டார்கள். படிக்கட்டில் இருந்து மெதுவாக மேல் பகுதியை நோட்டம் விட்டபடி அந்த பெண்ணை தேடினார்கள்.

அவர்கள் கண்ட காட்சி அந்தப் பெண் முழங்காலில் நின்று தரையோடு தலை வைத்து குனிந்தபடி தேம்பி தேம்பி அழுதுகொண்டே தானாக பேசிக்கொண்டிருப்பதை கண்டார்கள்.

தாங்கள் சந்தேகப்பட்டது ஒன்று.. ஆனால் இங்கு....

இந்த நான்கு பேரும் அந்தப்பெண் அருகே ஓடினார்கள். அவளை தொட்டு ஏன் இங்கு வந்து அழுகிறாய். உனக்கு என்ன வந்தது. வீட்டில் யாருக்காவது உடம்பு சரியில்லாமல் ஆபத்தான நிலையில் இருப்பதாக கடிதம் ஏதும் வந்ததா?

ஏன் அழுகிறாய் ? சொல் எங்களுக்கு, என்று அவளை ஆறுதல் படுத்தும் வண்ணமாக கேட்டார்கள்.

ஆனால் அவளோ, சற்று நேரம் தாமதித்து நான் இன்று மாத்திரம் அழவில்லை. இந்த கல்லூரிக்கு வந்த நாள் முதல் இங்குவந்து இயேசு கிறிஸ்துவிடம் ஜெபம் செய்கிறேன் என்றாள். எனக்காகவோ என் குடும்பத்துக்காகவோ நான் அழவில்லை. **உங்களுக்காகத்தான்** அழுகிறேன் என்றாள்.

நீங்கள் எப்படியாவது **இயேசு கிறிஸ்துவை** ஏற்றுக்கொள்ளவேண்டுமே என்று தினம் தினம் இங்கு வந்து அழுகிறேன் என்றாள்.

**சரி. நாங்கள் இயேசுவை** ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால் **அதை எங்களிடம் அல்லவா** சொல்லி இருக்கவேண்டும். இங்கு வந்து ஏன் அழுகிறாய்?

அவள் சொன்னாள்: வெறுமனே இங்கு வந்து அழவில்லை. நான் என் கடவுளாகிய இயேசுவிடம் உங்களை குறித்து சொல்லி நான் இயேசுவை கண்டு கொண்டது போல நீங்களும் கண்டுகொள்ள வேண்டுமே என்று ஜெபம் செய்கிறேன். நான் ஹாஸ்டலில் சேர்ந்த புதியதில் நான் ஜெபித்தபோது , பைபிள் வாசித்தபோது நீங்களெல்லாம் தமாஷ்பேசி சிரித்ததை நான் அறிந்தேன். இப்படிப்பட்ட நிலையில் நான் சொல்லி நீங்கள் எதையும் கேட்கமாட்டீர்கள் என்பதை உணர்ந்தேன். உங்களை என்னால் இயேசுவை புரியவைக்கவும் முடியாது, மாற்றவும் முடியாது. பெலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலேயே அது ஆகும். (சகரியா. 4:5) என்று என் வேத புத்தகத்தில் என் தெய்வம் கூறியிருக்கிறார், ஆகவேதான் அந்த இயேசுவிடமே உங்களை மாற்றச்சொல்லி என் ஜெபத்தில் கேட்டுக்கொள்கிறேன் என்றாள்.

அப்படியென்றால் இங்கே **இயேசுவின் படம்** அல்லது **சிலுவை** ஒன்றையும் காணோமே?

என் இயேசு **எந்த படத்திலும்** அல்லது மனிதனால் செய்து வைத்த **சிலுவையிலும் மரியாள் ஜெப மாலையிலும்** இல்லை. நான் எப்போது ஜெபித்தாலும் இயேசு ஒரு மனுஷன் வருவதுபோல அரூபமாய் வந்து என் ஜெபத்தை கேட்டுப்போவார்.

நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்கிறபோதெல்லாம் அவர் நமக்கு சமீபமாக இருக்கிறார். உபா, 4:7 உண்மையில் அவரை தொழுதுகொள்கிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாக இருக்கிறார். சங். 145:13 என்று கிறிஸ்தவ வேத புத்தகம் கூறுகிறது. ஆவியாய் இருக்கும் தெய்வத்தை நம் கண்களால் காண முடியாது.

தேவன் ஆவியாய் இருக்கிறார். அவரை தொழுதுகொள்கிற யாவரும் உண்மையோடும் ஆவியோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்று எங்கள் வேதம் போதிக்கிறது என்றாள்.

அதனால் இயேசு தெய்வத்தின் எந்த புத்தகத்தையும் அல்லது சிலுவையையும் வைத்து ஜெபிக்க மாட்டோம். எங்கள் தெய்வம் சிலை வணக்கத்தை வெறுக்கிறவர்.

அது சரி, இவ்வளவு நாள் எங்களுக்காக நீ ஜெபித்தும் நாங்கள் ஏன் மாறவில்லை ? என்றார்கள், அதற்கு அவள் என் ஜெபத்துக்கான பலன்தான் இப்போது நீங்கள் இந்த மொட்டை மாடிக்கு என்னை தேடி வந்தது என்றாள்.

இந்த தெய்வத்தோடு நாங்களும் பேச வேண்டும், அவரை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் அவ்வளவுதானே!. சரி இதோ பார் நம் அறையில் தங்கி படிக்கும் நம்மில் ஒருவளான **இவளுக்கு** மாதா மாதம் வரும் மாத விலக்கில் **அவள் அனுபவிக்கும்** வேதனையை நீ அறிவாயல்லவா!, கடந்த 5 வருடமாக பல வைத்தியம் செய்தும் மாதத்தில் 20 நாளும் பயங்கர இரத்தப்போக்கை வேதனையோடு அனுபவித்து அவள் அவதியுறுகிறாள், அதை உன் இயேசு **சுகப்படுத்த** முடியுமா? என்று அந்த நால்வரும் கேட்டார்கள்.

இயேசுவை அறிமுகப்படுத்த **நல்ல சந்தர்ப்பம்** கிடைத்ததை அறிந்து அதை நழுவவிட இந்த இரட்சிக்கப்பட்ட இந்த பெண்ணுக்கு மனமில்லை. அவர்கள் குறிப்பிட்ட இந்த சவாலை கேட்டபோது ஒரு ஆவலும் வேகமும் அவளுக்குள் வந்தது.

நிச்சயமாக **என் இயேசு** அவளை சுகமாக்க முடியும், அதுவும் இன்று இரவே சுகமாக்க முடியும் என்று தைரியமாக சவால்விட்டாள்.

எல்லாரும் ஆச்சரியத்தோடு கலைந்து சென்றார்கள்.

இந்த பெண் அன்று மதியம் முதல் சாப்பிடவே இல்லை. கல்லூரியும் செல்லாமல் தன் அறையில் தனித்து கர்த்தரோடு ஜெபிக்க ஆரம்பித்தாள்.

கர்த்தாவே ! கிறிஸ்தவ வேதம் அறியாத இந்த **இந்து பெண்களுக்**கு வசனம் சொல்லி உம்மைப் பற்றி புரிய வைக்க முடியாதே. அந்த பெண்ணுக்கு கிடைக்கும் **சுகத்தின் மூலம்** உம்மை இவர்களுக்கு காண்பிக்க முடியுமே!. தயவு செய்து இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு உதவி செய்யும் உம்மை நம்பி, உம் சக்தியை நம்பி நான் வாக்கு கொடுத்துவிட்டேன். உம் நாமத்தை மகிமைப்படுத்தும். சுகம் கிடைத்தால் அவர்கள் உம்மையே **குல தெய்வமாக** ஏற்றுக்கொள்வதாக வாக்கு பண்ணி இருக்கிறார்கள். உதவி செய்யும் என்று கண்ணீர் விட்டாள். அந்த இந்து மாணவியின் சுகத்துக்காக கதறினாள்.

அன்று இரவே அந்த குறிப்பிட்ட பெண்ணுக்கு உதிரபோக்கும் வலியும் முழுவதுமாக நின்றன.

மறுநாள் மதியம் அந்த பெண் தன் வழக்கப்படி ஜெபிக்க மொட்டை மாடிக்கு சென்றாள். அங்கு அவளுக்கு முன் மற்ற 4 **இந்து சிநேகிகளும்** வந்து அந்த வெய்யிலிலும் இவளுக்காக காத்து இருந்தார்கள். ஆச்சரியத்தோடு இவள் அவர்களை நோக்கினாள்.



அவர்கள் இவளை நோக்கி உன் தேவன் சுகமாக்குகிறவர் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் குறிப்பிட்ட இவளுக்கு **நேற்று இரவே பூரண சுகம்** கிடைத்துவிட்டது. நன்றி சொல்லவே நாங்கள் வந்தோம் என்றார்கள்.

இதை கேட்டபோது இந்த பெண் மனதிற்குள்ளேயே கர்த்தரை துதித்தாள்.

உடனே அவள் கூறினாள்: நாம் எல்லாரும் சுகமாக்கினவருக்கு நன்றி கூறுவோம் என்று கூறி ஜெபிப்பதற்கு முன் **இயேசு யார்** என்பதைப் பற்றி தெளிவாக அவர்களுக்கு கூறினாள். தன் வாழ்க்கையில், தான் இரட்சிக்கப்பட்ட விதத்தையும் சாட்சியாக கூறினாள்.

பிறகு ஜெபம் என்றால் என்ன? எப்படி ஜெபிப்பது என்றெல்லாம் அன்று அவர்களுக்கு கற்றுக்கொடுத்தாள்.

இப்போது அந்த பெண்ணோடு நால்வரும் முழங்கால் படியிட்டனர். **ஜெபித்தனர்,துதித்தனர்**

இப்படி இவர்கள் 5 பேரும் மொட்டை மாடியில் பேசிக்கொண்டு, ஜெபித்துக்கொண்டு

இருந்த வேளை கல்லூரி மணி அடித்தது. நேரம் போனதே தெரியவில்லை. அன்று இவர்கள் யாவரும் மதிய உணவு சாப்பிடாமல் வகுப்பறைக்கு சென்றனர். ஆனால் ஆத்தும ஆகாரம் அவர்களுக்குள் நிறைந்து வழிந்தது.

இப்போது தினம் 5 பேர் மொட்டை மாடியில் மற்றவர்களுக்காக ஜெபிக்க தொடங்கினர். மாதங்கள் கடந்தன . இந்த 5 பேர் ஜெபிக்கும் அந்த நேரம் தடைபடாமல் தொடர்ந்தன. ஒரு நாள் தேவ ஆவியானவர் இவர்கள் ஜெபத்தில் ஊற்றப்பட்டார். இரண்டு இந்து சகோதரிகள் ஆவியினால் நிறைந்து தேவனை துதித்தனர். இயேசுவை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி ஜெபிக்க சொல்லிக் கொடுத்த அந்த பெண் CSI சபையை சேர்ந்தவள். பரிசுத்தாவியின் நிறைவை குறித்து அறியாதவள். ஆனால் அன்றைய ஜெபத்தில் மற்ற இந்து மாணவிகள் பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டது அவளுக்கு ஆச்சர்யத்தை கொடுத்தது.

ஜெபத்தில் மற்றவர்களை கிறிஸ்துவுக்குள் நேராக நடத்திய அந்த பெண்ணுக்கோ பரிசுத்தாவியின் நிறைவின் உணர்வு கிடைக்கவில்லை. அந்த பெண்ணுக்கு இந்த குறை அவமானமாக இருந்தது. கண்ணீர் விட்டாள்.

ஆண்டவரே, பரிசுத்தாவியானவரின் நிறைவின் அனுபவம் எனக்கு ஏன் இன்னும் அருளப்படவில்லை. புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்ட அந்த இந்து பெண்களைப் பரிசுத்தாவியானவரின் விசேஷ வரத்தால் நிறைம்பியபோது அவர்களுக்கு உம்மை காண்பித்த எனக்கு அந்த அனுபவம் இல்லாதது அவமானமாக இருக்கிறது என்னையும் நிரப்பும் என்றாள்.

அவளின் மன வேதனைக்கான காரணத்தை மற்ற சகோதரிகளுடன் பகிர்ந்துகொண்டாள். இப்போது மற்றவர்கள் இவளுக்காக பரிசுத்தாவியின் அனுபவம் பெற ஆண்டவரிடம் ஜெபித்தனர். எங்களை நிறைத்த தெய்வமே எங்களை உமக்கு நேராக வழிகாட்டின இந்த சகோதரியையும் பரிசுத்தாவியினால் நிறைத்து அந்த பரம சந்தோஷத்தை அனுபவிக்கச்செய்யும் என்று கேட்டனர். கர்த்தர் அவர்களின் ஜெபத்தை கேட்டார். ஒரு நாள் இவளும் ஆவியினால் நிரப்பப்பட்டாள். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

**இப்போது மொட்டை மாடியில் ஜெபிக்கும் கூட்டம் 1+4=5 ஆக மாறியது.**

மற்றொரு நாள் 7 குரும்புகார பெண்கள் அடிக்கடி இந்த 5 பேரும் மொட்டை மாடிக்கு செல்லும் ரகசியம் என்ன என்று அறிய சத்தமில்லாமல் பதுங்கி சென்று

நோக்கினார்கள். அங்கு 5 பேரும் ஜெபித்துக்கொண்டு இருப்பதை கண்டனர். பிறகு அவர்கள் விவரம் கேட்டார்கள். அப்போது இந்த முதல் கிறிஸ்தவ சகோதரி அவர்களுக்கு பதில் சொல்லாமல் மாதவிடாய் வியாதி சுகப்பட்ட அந்த பெண்ணையும் மற்ற பெண்களையும் தங்கள் அனுபவத்தை அவர்களுக்கு கூறச்சொன்னாள். வந்த மற்றவர்கள் அதை ஆச்சரியத்தோடு கேட்டார்கள். இப்போது என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் ஜெபிக்கப் போகிறோம் என்றார்கள்.

அதைக் கேட்ட அவர்கள் நீங்கள் ஜெபியுங்கள் நாங்கள் வெறுமனே இங்கே இருக்கிறோம் என்றார்கள். மறுபடியும் ஜெபம் தொடர்ந்தது. ஆரம்பத்தில் இணைந்த 5 பேரும் தங்கள் ஜெபத்தை தொடர்ந்தனர். அப்போது தேவ ஆவியானவர் அந்நிய பாஷை மூலமாக சவுராஷ்டிரா ஜாதி பாஷையில் பேசினார். புதிதாக வந்த ஏழு பேரில் ஒருவள் செள்ராஷ்ட்டிரா பாஷை பேசபவள். அவளைப் பற்றி வெளிப்பாடு கூறப்பட்டது. அவளையும் அவள் குடும்பத்தையும், குடும்பத்தில் உள்ள ஒரு குழப்பத்தையும் அது விஷயமாக அவர்கள் படும் வேதனையும் கூறப்பட்டபோது புதிய சகோதரிக்குள் பயமும் பக்தியும் திகிலும் உண்டாக வந்த அந்த புது மாணவியர் தங்களை அறியாமல் முழங்கால் படியிட்டனர். வாழ்கை ரகசியங்களை அறியும் இந்த தேவனே உண்மையான தேவன் என்றனர்.

மேலும் **சவுராஷ்ட்ரா பாஷையே** தெரியாத அந்த தமிழ் இந்து பெண் எப்படி அத்தனை தெளிவாக **தன் குடும்ப ரகசியங்களை** சவுராஷ்ட்டிரா பாஷையில் வெளிப்படுத்தினாள். சவுராஷ்ட்ரா பெண்ணுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. இப்போது அங்கு வந்த ஏழு பெண்களும் தங்களை அறியாமல் மெய் மறந்து இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரை துதிக்க தொடங்கினார்கள்.

பிறகு கிறிஸ்துவைப்பற்றி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அவளுக்கு உள்ளத்தில் வாஞ்சை , தாகம் உண்டானது. இப்போது இந்த புதியவர்களும் தினம் இவளுடன் இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தனர். இப்போது மொட்டை மாடியில் கூடிய மாணவிகளின் எண்ணிக்கை (1+4+7=12 ஆனது)

இப்போது இப்படி கர்த்தரால் இணைக்கப்பட்ட இந்த பெண்கள் எல்லோரும் பட்டப் படிப்புக்கு வந்தனர். சிலர் பி. எஸ்.சி. சிலர் பி. ஏ. இப்படி பலர் பட்டப்படிப்பின் கடைசி வருடத்துக்கு வந்தனர்.

இப்போது கூடி ஜெபிக்கும் அவர்களின் கணக்கு என்ன தெரியுமா ? (1+4+7+ 61=73)

எழுபத்து மூன்று பேர்களும் சேர்ந்த ஒரு பெரிய **ஜெபக்கூட்டம்** தினம் மொட்டை மாடியில் கூடி தேவனை துதிக்க ஆரம்பித்தது. எல்லாரும் **ஞானஸ்நானம்** எடுத்தனர். பலருக்கு தீர்க்க தரிசனம் வரம் கொடுக்கப்பட்டது. பல வருட அனுபவமுள்ள கிறிஸ்தவர்களுக்கும் கிடைக்காத ஸ்லாக்கியம் அவர்களுக்கு கிடைத்தது.

இப்போது விவரம் கல்லூரி பிரின்ஸ்பால் வரைக்கும் போய்விட்டது. இவர்களின் **ஜெபத்துக்கு தடை விதிக்கப்பட்டது.** கிறிஸ்தவர்களுக்குள்ளேயே இதுபோல தடைவிதிக்கும்போது ஒரு இந்து ஸ்தாபன தலைவி எப்படி இருப்பாள் என்பதை நாம் அறிந்ததே. ஆகவே இவர்கள் மாலையில் கல்லூரி வாசலுக்கு முன் உள்ள ஒரு வீட்டில் கூடிவர அரம்பித்தனர்.

இந்த விவரம் எனக்கு அறிவிக்கப்பட்டு மாதம் **ஒருமுறை** அங்கு சென்று அவர்களை கிறிஸ்துவின் வசனத்தில் வளர அவர்களை வழி நடத்தினேன். மாணவிகளில் ஏராளமானவர்கள் தேவ ஆவியால் நிரப்பப்பட்டனர். கர்த்தர் மாணவிகளிடையில் வல்லமையான காரியங்களை செய்தார்.

## கல்லூரி படிப்பு முடிந்தது

இப்போது கல்லூரி படிப்பு முடித்து எல்லோரும் அவரவர் வீடுகளுக்கு திரும்பினர்.

இப்போதுதான் இவர்களுக்குள் புதிய புதிய பிரச்சனைகள் எழ ஆரம்பித்தது. திருமண பிரச்சனை வந்தபோது பாவம் இந்த பிள்ளைகள் செய்வதறியாது தவித்தனர்.

பலர் நான் வீட்டைவிட்டு வெளியே வந்துவிடுகிறேன் என்றெல்லாம் எனக்கு கடிதம் எழுதினார்கள்.

ஒரு ஆணாயிருந்தால் ஒருவேளை தைரியத்தோடு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ அவர்களுக்கு உதவலாம். ஆனால் இவர்களோ வாலிப பெண்கள். பெண்கள் அவரவர் பெற்றோர் பாதுகாப்பில் இருப்பதுதான் நல்லது. அது இந்துவா, கிறிஸ்தவரரோ யாராயிருந்தாலும் சரி. அப்படி தைரியத்தோடு வீட்டைவிட்டு வெளி வந்தாலும் அவர்களை சரியான வழியில் நடத்த கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் நம்மிடையே இல்லை.

ஒரு ஏமி கார்மைக்கல் அம்மையாரைப் போன்று யாராவது தோன்றினால்தான் முடியும்.

ஆகவே பெற்றெடுத்த தாய் தந்தையரைப் விட்டு இப்படிப்பட்ட பெண்களை வெளிவரச் சொல்லாமல் ஜெபத்தோடு பெற்றோருக்கு கீழ்படியும்படி அவர்களுக்கு

கட்டளை இட்டேன். அப்பெண்களில் பலருடைய திருமண ஜீவியம் இந்து மதத்திலேயே இணைக்கப்பட்டது. சிலர் இப்போது ரகசிய கிறிஸ்தவர்களாகவே ஜீவிக்கின்றனர்.

அதில் ஒன்றிரண்டு பேர் பின்மாற்றத்தோடு இந்துவோடு இந்துவாக வாழ்கின்றனர். அவர்களில் ஒரு சகோதரி தான் கல்யாணம் செய்த புருஷனை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தி இப்போது இருவரும் **ஞானஸ்நானம்** பெற்று சாட்சியோடு வாழ்கிறார்கள்.

## பிராமண சகோதரியின் சாட்சி

இந்த கூட்டத்தில் இருந்து பிரிந்து **கல்லூரி படிப்பு முடித்து** தன் வீட்டுக்கு போன ஒரு பிராமண சகோதரியின் கடிதம் பின்வருமாறு.

அன்புள்ள டாக்டர் அண்ணா.

உங்கள் ஆலோசனையின்படி ஜெப குறைவு ஏற்படாமல் கர்த்தருக்குள் ஜீவிக்கிறேன். கடந்த சில மாதங்களாக என் வாழ்க்கையில் ஏற்பட்ட பல மாறுதல்களை உங்களுக்கு விவரிக்கிறேன். ஜெபியுங்கள்.

நான் கல்லூரியை விட்டு வீட்டுக்கு வந்த சில வாரங்களில் தினம் நடக்கும் எங்கள் வீட்டு **பூஜையில்** கலந்துகொள்ளாமல் கூடியவரை சமாளித்தேன். வர வர பெற்றோரும், என் அண்ணன்மார் யாவரும் என்னை சந்தேகப்பட்டனர். என்னை இரகசியமாக கவனிக்க ஆரம்பித்தனர்.

நான் நெற்றியில் பொட்டு வைக்ககாததைத்தான் முதலில் கவனித்தார்கள். என்னை **முண்டச்சி** (விதவை) என்று அவர்கள் பாஷையில் திட்ட ஆரம்பித்தனர்.

தினம் காலை மாலை என் அறைக்கு ரகசியமாக வந்து கவனித்தனர். ஒருநாள் நான் வாசிக்கும் வேத புத்தகத்தை என் அண்ணன் பெற்றோரிடம் காண்பித்து விட்டான். நான் கிறிஸ்துவை நேசிப்பதையும், அதனால்தான் நான் பொட்டு வைப்பதில்லை. **பூஜைக்கு வருவதில்லை** என்பதையும் என் வீட்டார் அன்று கண்டு பிடித்துவிட்டனர்.

என்னிடம் விபரம் கேட்டனர். நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆம். அண்ணா நான் அவர்களிடம் நான் இயேசுவை ஏற்றுக்கொண்டதை மறைக்கவில்லை. பொய் சொல்லவும் இல்லை.

நீங்கள் சொல்லிக்கொடுத்தபடி **பொய்** சொல்லாமலும் , **உண்மையையும்** சொல்லாமல் மௌனமாக **சில நாள் சமாளித்தேன்.** அப்படி அதிக நாள் என்னால் சமாளிக்க முடியவில்லை. நான் இயேசுவை ஏற்றுக்கொண்ட முழு விவரத்தையும் இப்போது வெளிப்படையாக கூறிவிட்டேன்.

இப்போது என் வீட்டார் என்னை கொடுமைப்படுத்த ஆரம்பித்தனர். என்னோடு பேசும்போது அருவருப்போடு பழகினர். நீ **கிறிஸ்தவ பையனை** காதலிக்கிறாயா ? அதனால்தான் உனக்கு இந்த மாற்றம் ஏற்பட்டதா? என்று துருவித்துருவித் கேட்டனர். உறவினர் பலர் அப்படித்தான் என்னை சந்தேகப்பட்டனர். கலியாணத்துக்காகதான் நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதாக நினைத்தார்கள். போயும் போயும் தாழ்ந்த ஜாதிகள் உள்ள மதத்திலேயா இணைந்தாய் என்று ஒவ்வொரு நாளும் என்னை ஏசினார்கள்.

திடீர் என்று ஒரு நாள் பைபில் படித்துக்கொண்டு இருந்த சமயம், என் அண்ணன் பைபிளை பிடுங்கி என்னை வாய்க்கு வந்தபடி திட்டி அப்படியே அதை அடுப்பில்போட்டுவிட்டான். அதை நெருப்பில் இருந்து பைபிளை எடுக்க என்னால் இயன்றவரை முயன்றேன், முடியவில்லை. அது எரிந்து முடியும் வரை என் வீட்டினர் அடுப்பைச்சுற்றி நின்று கொண்டனர். வாய்விட்டு கதறினேன். என் உடல் எரிவது போல் துடியாய் துடித்தேன்.

சற்று நேரத்தில் எல்லோரும் அந்த இடத்தைவிட்டு போய்விட்டனர். நான் ஓடிச்சென்று அடுப்புக்குள் கைவிட்டு சாம்பலை கிளறினேன். அதில் ஒரே ஒரு தாள் கிடைத்தது. அது சுற்றிலும் தீய்ந்திருந்தது. சங்கீத புஸ்தகத்தில 62,63,64,65 ஆகிய சங்கீதங்கள் அறை குறையாக அதில் காணப்பட்டது.

அண்ணா. இந்த ஒரு தாள் எனக்கு எத்தனை ஆறுதல் அளித்தது தெரியுமா? அதை வீட்டின் பின்புறம் உள்ள பழைய சாமான்கள் வைக்கும் அறையில் உடைந்த சாமான்களுக்கிடையில் வைத்துவிட்டேன்.

இப்போது தினம் அந்த அறையை சுத்தம் செய்வது போல அங்கு சென்று கதவடைத்து அந்த சங்கீதங்கள் முழுவதும் வாசிப்பேன். பிறகு பக்கத்தில் **பாத்ரூமில்** சென்று **முழங்கால் படியிட்டு** ஜெபிப்பேன். அண்ணா **இதுதான் என் தினசரி தியானமும் ஜெபமுமாக இருந்தது**.

இதற்கும் ஒரு முடிவு வந்தது. தினம் தினம் பழைய சாமான் வைக்கும் அறைக்கு ஒழுங்காக இவள் போகிறாளே, யாரும் வருடத்துக்கு ஒரு முறைதான் அப்படிப்பட்ட அறையை சுத்தம் செய்வார்கள். இவள் ஏன் தினம் சுத்தம் செய்கிறாள் என்று சகந்தேகப்பட ஆரம்பித்தார்கள்.

ஒருநாள் என் அண்ணன் சப்தமில்லாமல் என் பின்னே வந்து நான் பயபக்தியோடு அந்த சங்கீத தாளை வாசித்துக்கொண்டு இருக்கும்போது கையில் வைத்திருந்த அந்த ஒரு தாளையும் பறித்துக்கொண்டு சுக்கு நூறாக கிழித்து கிணற்றில் எறிந்து விட்டான்.

இதை படிக்கும்போது நீங்கள் மிகவும் வருந்துவீர்கள் என்று எனக்கு தெரியும். ஆனால் நான் இப்போது அழவும் இல்லை, வருத்தப்படவும் இல்லை. ஏன் தெரியுமா அண்ணா.

பல மாதங்களாக அந்த **ஒரு தாளையே தினசரி தியானமாக** நான் வாசித்துக் கொண்டிருந்ததால் எனக்கு அந்த **சங்கீதங்கள்** யாவும் மனப்பாடமாக மனதிற்குள்ளேயே பதிந்துவிட்டது. இப்போது தினம் என் வழக்கப்படி **பாத்ரூமுக்கு** செல்வேன். அந்த **நான்கு சங்கீதங்களையும்** நான் அரைகுறையாக படித்த மாதிரியே ஒப்புவிப்பேன். அதுதான் என் தினசரி **வேத வாசிப்பு,** பிறகு நான் ஜெபிப்பேன்.

அண்ணா என் மனதிற்குள் பதிந்துவிட்ட வசனங்களை என் அண்ணனோ வீட்டின் பெற்றோரோ யாரும் **தீவைக்க முடியாது.** எத்தனை **ஆறுதல்,** இதுபோதும் அண்ணா!.

இதை வாசித்துவிட்டு எனக்காக ஜெபியுங்கள். என்னோடு நீங்கள் எந்த கடித தொடர்பும் தயவுசெய்து வைக்க துணியாதீர்கள், என்னை வந்து பார்க்கவும் முயலாதீர்கள். அதனால்தான் என் விலாசம் உங்களுக்கு எழுதவில்லை. எனக்காக ஜெபித்தீர்களேயானால் அதுவே போதும். என் இயேசு எனக்குள் இருக்கிறார். அதுபோதும் எனக்கு. அவர் என்னை மரணம் வரை வழி நடத்துவார்.

எனக்கு பைபிளோ, வேறு ஆவிக்குரிய புஸ்தகமோ அனுப்ப முயற்சிக்க வேண்டாம் . அதனால் என் வீட்டில் பெரும் பிரச்சனைகள் உண்டாகும். எனக்கு பைபிள் வாசிக்காமல் போனாலும் என் ஜெபத்தை கேட்க அந்த நாற்றம் எடுத்த பாத்ரூமுக்குள் என் இயேசு வருகிறார். அவரோடு நான் பேசுவேன். ஆவியானவரே என்னை உணர்த்தி கிருபையாக வழிநடத்துகிறார்.இந்த அனுபவம் நான் மரிக்கும்வரை என்னைவிட்டு நீங்காமல் இருக்க இயேசு தெய்வம் எனக்கு துணை செய்வாராக.

இப்படிக்கு,

உங்கள் அவிக்குரிய மகள்

☐ இதை வாசிக்கும் அன்பானவர்களே,

இந்த குறிப்பிட்ட பிராமண சகோதரிக்காகவும் இவளைப்போல் கிறிஸ்துவின்பால் அன்புகொண்டு வெளியரங்கமாக **கிறிஸ்துவுக்காக வாழமுடியாத** அநேக இந்து சகோதரிகளுக்காகவும் ஜெபிக்கவும்.

**சிவகாசி, கோவில்பட்டி** இன்னும் தமிழ் நாட்டின் சில பாகங்களில் வட இந்தியாவில் பல கிராமங்களின் இப்படி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ரகசிய கிறிஸ்தவர்களாக வாழும் மக்களை உங்கள் ஜெபத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

இந்த இந்து வாலிப பெண்ணின் இரட்சிக்கப்பட்ட புதிய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் கண்டீர்களா?

## பொட்டு

பரம்பரையாக வைத்த நெற்றிப் பொட்டை விலக்கினாள். ஆனால் இன்றைக்கும் எத்தனை கிறிஸ்தவர்கள் பொட்டு வைத்து தன்னை அலங்கரிக்கிறார்கள். கேட்டால் அது இந்திய கலாச்சாரம் என்கிறார்கள். பொட்டு வைப்பது **இந்திய கலாச்சாரம்** அல்ல. **இந்துக்களின்** கலாச்சாரம் ஆகும்.

இந்துக்கள் தாங்கள் வணங்கும் **தெய்வங்களை** வெளிப்படுத்த பொட்டுக்களை வைக்கிறார்கள்.

**சிவப்பு பொட்டு, மஞ்சள் பொட்டு, கருப்பு பொட்டு** இவைகள் எல்லாவற்றிக்கும் அவர்கள் இதிகாசங்களில் ஒவ்வொரு அர்த்தம் உண்டு. அதை கிறிஸ்தவர்கள் பின்பற்ற கூடாது.

புடவையின் கலருக்கேற்ற **பொட்டு** அழகுக்காக இடுகிறேன் என்று வாதித்தாலும் அந்த முறையை நாம் பின்பற்ற கூடாது.

## வேத வாசிப்பு ஜெபம்

தினசரி கிழிந்த கரிந்த பைபிளின் ஒரு தாளை வைத்து அந்த பிராமண பெண் தன் காலை வேத வாசிப்பை நிறைவேற்றினாள். அதன்பின் அந்த தாளும் தன் கைவிட்டு போனபிறகு மனப்பாடம் செய்த வசனங்களை தினசரி வாயில் கூறியபின் ஜெபிக்கத் தொடங்கினாள்.




ஆனால் பரம்பரை கிறிஸ்தவர்களான நமக்குள் **தினசரி வேத வாசிப்பும் ஜெபமும்** எப்படி இருக்கிறது? கையில் முழு வேதம் உண்டு **ஜெபிக்க நேரம் உண்டு.** ஆனால் தினம் வேதம் வாசித்து ஜெபிக்கிறோமா?



கர்த்தருடைய வசனத்தில் மேலும், ஜெபத்தின் மேலும் அந்த **பிராமண பெண்ணுக்குள்ள வாஞ்சையை பாருங்கள். வேதத்தை கேளாதவனுடைய ஜெபம் அறுவறுப்பா யிருக்கிறது .** நீதி. 28:9

**அவர்கள் என் வேதத்தை மறந்தார்கள் நானும் அவர்கள் பிள்ளைகளை மறப்பேன்.** ஓசியா 4:9 அறிந்திருந்தும் தவறு செய்கிறவன் அனேகம் அடி அடிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது. **வசனத்தை அறியும்** நாம் வசனத்தின்படி **ஜீவிக்கவில்லையானால்** தண்டனை நிச்சயம்.

தினசரி காலை உன் வேத வாசிப்பும் , ஜெபமும் குறையாமல் ஜாக்கிறதையாக பார்த்துக்கொள், அப்படியானால் நீ ஒரு போதும் விழுவதில்லை.

இந்த பாகத்தை நான் எழுதிய நோக்கம் இதை வாசிக்கும் நீங்கள் இதுவரை எத்தனை ஆத்துமாக்களை ஆண்டவருக்காக ஆயத்தப்படுத்தினீர்கள். சேலம் இந்து கல்லூரியில் ஒரு சிறு பெண் **தன் பட்டப்படிப்பு முடிவதற்குள்** ஏறக்குறைய 4 வருடத்துக்குள் **73 ஆத்துமாக்களை** ஆதாயப்படுத்தினாளே ! நீங்கள் இரட்சிக்கப்பட்டு எத்தனை வருடம் ஆகிறது ? இதுவரை உங்கள் இரட்சிப்பை எத்தனை பேரோடு பகிர்ந்துகொண்டீர்கள் எத்தனை பேர்களை இயேசுவுக்குள் நேராக வழி நடத்தினீர்கள் ?

ஆரம்ப நாட்களில் நானும் ஒரு சகோதரனும் இணைந்து கூட்டங்கள் நடத்திக்கொண்டு இருந்தபோது சில சம்பவங்கள் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. அந்த சகோதரன் போச ஆரம்பிக்கும்போது **நானும் மற்ற சகோதரர்களும்** மேடையில் இருந்து இறங்கி கூட்டத்தை விட்டு வெளியே வருவோம்.

கூட்டத்தை அப்படியே சுற்றி பார்த்துக்கொண்டு வருவோம். அப்படி ஆளாளுக்கு ஒரு திசையாக பிரிந்து போய்விடுவோம். ஆங்காங்கு கிண்டல் **தமாஷ்** அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் வாலிபர்களையும் மற்றவர்களையும் சந்திக்க நேர்ந்தால் நாங்களாகவே வலிய சென்று அவர்களிடம் பேச்சு கொடுப்போம். சில சமயம் அவர்கள் எங்களையும் சேர்த்து கேலி செய்வார்கள். அவர்களை டீக்கடை அல்லது ஓட்டலுக்கு அழைப்போம். (ஓட்டலை தவிர வேறு எங்கு தனியாக கூப்பிட்டாலும் அவர்கள் வர மாட்டார்கள்). காப்பி டீ என்றதும் சிரித்துக்கொண்டே வருவார்கள். ஒரு டீயோ காப்பியோ அவர்கள் குடித்தவுடன் தானாக எங்களுக்கு அடிமையாகிவிடுகிறார்கள். இப்போது மெதுவாக எங்கள் சாட்சியை அவர்களுக்கு அறிவிப்போம். அப்போது அவன் தன் வாழ்க்கையையும், தன் பெருமையையும் சிந்திக்க ஆரம்பிப்பான். இதுதான் தருணம் என்று கூட்டம் நடக்கும் இடத்துக்கு அப்பால் **இருட்டான இடம் தேடி** அவனை கூட்டிச்செல்வோம். அவனோடு இணைந்து ஜெபிப்போம். அந்த இருட்டு அவனுக்கு பிரகாசமாகத் தெரியும். அவன் தன்னை ஒப்புக்கொடுப்பான். பின்பு அவனுக்கு ஆலோசனை கொடுத்து பழைய நண்பர்களிடம் சேர விடாமல் கூட்டத்தில் வேறு பக்கம் கொண்டுபோய் விட்டுவிட்டு மேடையை நோக்கி ஓடுவோம். இதன் இடையில் அந்த சகோதரனின் பிரசங்கம் முடியும். இந்த சமயத்தில் ஒன்றுமே நடைபெறாதது போல நாங்கள் யாவரும் மேடையில் காணப்படுவோம்.

அன்று இரவு நாங்கள் படுக்கைக்கு போகும்போது இரவு ஒன்று அல்லது இரண்டாகும். அப்போது நாங்கள் உனக்கு கிடைத்த ஆத்துமாக்கள் எண்ணிக்கை

எத்தனை? எனக்கு எத்தனை ஆத்துமாக்கள்? இன்று கிடைத்தது என்று லாப நஷ்டங்களை கணக்கு பார்ப்பதுபோல பேசிக்கொள்வோம்.

**இப்போது ஒருநிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.**



டி.எல். மூடி தன் ஊழியத்தை முடித்து இரவு வீடு திரும்புகையில் நண்பர்கள் இப்படி கேட்பார்களாம். இன்று எத்தனை ஆத்துமாக்களை ஆதாயம் செய்தீர்கள் என்று கேட்பார்களாம். அதற்கு டி.எல் மூடி இரண்டரை ஆத்துமாக்கள் என்று கூறுவாராம். அது எப்படி இரண்டரை? இரண்டு பெரியவர்கள் ஒரு சிறுவன் ஆக இரண்டரை ஆத்துமாக்கள் என்பாராம் இப்படியா கணக்கு ?

இல்லை இல்லை இரண்டு சிறுவர்களும் ஒரு பெரியவரும் இரட்சிக்கப்பட்டனர் என்பாராம். இந்த பதிலின் அர்த்தம் என்னவென்றால் **இரண்டு சிறுவர்கள்** தங்கள் **வாழ்நாள் முழுவதும்** இயேசுவுக்காய் ஜீவிக்கமுடியும்.ஆகவே அவர்கள் **இரண்டு பேரும் முழு ஆத்துமாக்கள்.** வயது முதிர்ந்தவரோ **பகுதி நாட்களை** வீனாய் கழித்துவிட்டார். இனி **மீதி பாதி நாட்களுக்கு** மட்டும் தான் கிறிஸ்துவுக்காய் வாழமுடியும் . ஆகவே பெரியோரை 1/2 ஆத்துமா என்று குறிப்பிட்டேன் இப்படியும் அர்த்தம் கொள்ளலாம் என்பாராம்.

அப்படியே நாங்களும் இன்று நீங்கள் எத்தனை ஆத்துமாக்களை பிடித்தீர்கள்? எனக்கு இத்தனை தான் கிடைத்தது. என்றெல்லாம் கணக்கு போடுவோம். ஒருவர் மற்றவரைவிட அதிக ஆத்துமாக்களை பிடித்து விட்டாரானால் உடனே ரோஷத்தோடு நாளை பார் எத்தனை பேரை பிடிக்கிறேன் என்று கூறி எங்களில் சிலர் பகலும் இரவும் ஆத்துமாக்களுக்காக அலைவார். ஆண்டவரிடம் அழுவோம். ஆண்டவரே நாளை ஒரு 10 ஆத்துமாக்களையாவது நாங்கள் தனியே சந்திக்க வேண்டும் எங்களுக்கு உதவி செய்யும் என்போம்.

இரட்சிக்கப்பட்ட விசிவாசிகள் எந்த ஆவிக்குரிய கூட்டங்களில் கலந்து கொள்ளும் போதும் பிரசங்கம் கேட்க மட்டும் என்று இல்லாமல் அந்த கூட்டங்களில் ஆத்துமாக்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து இயேசுவுக்கு நேராக வழிநடத்த **தனித் தாள்** ஊழியம் செய்யவும் உள்ளத்தில் தீர்மானித்துமக்கொள்ள வேண்டும்.

1000 கூட்டங்களில் பிரசங்கம் செய்வதைவிட **ஒரு தனி ஆத்துமாவை** இயேசுவுக்கு நேராக நடத்துவதுதான் மிக சிறந்த ஊழியமாகும். தேவன் நம்மை ஒருநாள் கணக்கு கேட்பார். நீ இரட்சிக்கப்பட்டது நீ மட்டுமே பரிசுத்த சந்தோஷம் அனுபவிக்க அல்ல. மற்ற மக்களையும் அந்த சந்தோஷத்தில் வழி நடத்தவே. அதனால்தான் நீ மரிக்கும் முன்பதாகவே ரட்சிப்பின் அனுபவத்தை கர்த்தர் உனக்கு தந்தார்.

கடைசி நியாய தீர்ப்பின் காலத்தில் கீழே குறிப்பிடும் வார்த்தைகள் இயேசு உன்னை பார்த்து கூறிவிடாதபடி ஜாக்கிறதையாக உன்னை பார்த்துக்கொள்

**பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனை புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்** மத். 25:30 கர்த்தருக்கு **பிரயோஜனமில்லாது** இத்தனை வருடம் வாழ்ந்த **இந்த கிறிஸ்தவனால்** இயேசுவுக்கு எந்த பிரயோஜனமும்மில்லை. இவன் இரட்சிக்கப்பட்டிருந்தாலும் இவனை **இருளில் தள்ளி போடுங்கள்** என்று கூறப்படுமானால், நீ எத்தனை வருட ரட்சிப்பின் அனுபவத்தில் ஜீவித்து இருந்தாலும் பிரயோஜனமில்லாமல் போய்விடும். உன் **தாலந்து அளவின்** எண்ணிகையை கணக்கு பார்க்காதே. தாலந்து ஒன்று இருந்தாலும் அதைக்கொண்டு லாபம் சம்பாதி. லாபம் இல்லாமல் தேவ ராஜ்யத்தில் இயேசுவை சந்திக்க முடியாது.

**ஆத்துமா ஒன்றும் இரட்சிக்காமல் வெட்கத்தோடே ஆண்டவர் வெறும் கையனாக உம்மை கண்டுகொள்ளல் ஆகுமா?** என்ற ஞான பாட்டை ஞாபகப்படுத்திகொள்ளுங்கள்.

**குறிப்பு :** இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் மாணவி மாணவிகளாக இருந்தாலும் சரி அல்லது ஏதாவது ஒரு வேலையில் இருந்தாலும் சரி. நீ இருக்கும் இடத்தில் யாருக்காவது இயேசுவை அறிவித்து ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டியது **உன் கடமை.** அந்த சிறு பெண் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தியது உனக்கு மாதிரியாக இருக்கட்டும்.

**ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துக்கொள்ளுகிறவன்** ஞானமுள்ளவன், நீதி. 11:30

உன் ஆகாரத்தை தண்ணீர்களின் மேல் போடு அநேக நாட்களுக்கு பின்பு அதன் பலனை காண்பாய் பிர. 11:1

ஆகாரம் எனபது கர்த்தருடைய **வசனம்** தண்ணீர் என்பது ஜனங்களை குறிக்கும்.

**தண்ணீர்களை** கண்டாயே அவைகள் **ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்.** வெளி. 17:15

# ஒவ்வொரு நாளும் நம்
# காலை ஜெபத்தில் கேட்கவேண்டியவை

ஆண்டவரே இன்று எனக்கு ஆத்துமாக்களைத் தாரும், யாருக்காவது உம் அன்பை நான் அறிவிக்க வேண்டும்.

உம்மைப்பற்றி சொல்ல எனக்கு ஞானத்தை தரும். உம்மைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க ஏற்ற சூழ்நிலையையும் எனக்கு உண்டாக்கித் தாரும்.

தனித்த ஒரு ஆத்துமாவுக்கு உம்மைப்பற்றி அறிவிப்பதை பாரத்தோடு செய்ய எனக்குள் ஆத்தும பாரத்தை தாரும்.

என் ஜெபத்தில் அழிந்துபோகிற ஆத்துமாக்களைக்காக நான் அழவேணடும். எனக்காக என்னை இரட்சிப்பதற்காக இயேசுவே நீர் எத்தனை பாடுகளை, கஷ்டங்களை, அனுபவித்தீர், அதனால் அல்லவா இன்றும் உலகம் தராத இத்தனை பெரிய இரட்சிப்பின் சந்தோஷத்தை நான் அனுபவிக்க முடிந்தது.


இதற்கு நன்றி கடனாக நன்றியுள்ளவனாக நீர் தேடும் ஆத்துமாக்களை நானும் தேடி அலைவேன். என் ஜெபத்தை கேளும், என்னை வழி நடத்தும் எனக்கு ஆத்துமாக்களை தாரும்.

இயேசு என்ற அந்த நல்ல நாமத்திலேயே தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். பிதாவே. ஆமென் !

**கிறிஸ்தவ மாணவ மாணவிகள் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டிய வசனங்கள்**

உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் **விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.** 1 தீமோ 4:12

கர்த்தாவே என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் உட்காருதலலையும் என் எழுந்திருக்கிறதலையும் நீர் அறிந்திருக்கிறீர். என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னை சூழ்ந்திருக்கிறீர் . என் **வழிகளெல்லாம் உமக்கு தெரியும்.** சங். 139:3



இந்த தொழுவத்திலுள்ளவைகலில்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும்.

அவைகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும். அப்போது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும்.

யோ. 10:16

**OCTOBER-2023**

# Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**

| | |
|---|---|
| India | - Rs.60/ |
| Foreign | - Rs.600/ |

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**